



නාවැළි
NAAVELI
# நாவெளி
பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
Divisional Monthly e-Magazine
ප්‍රාදේශීය මාසික ඉ-සඟරා




மலர்: 07 ✦ இதழ்:19 ✦ 2024ஆம் வருடம் ஆடி மாதம் இருபத்தைந்தாம் திகதி

## அகில இலங்கை மட்டத்திற்கு தெரிவானது றாணைமடு இந்துக்கல்லூரி



கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் நடாத்திவரும் விளையாட்டுப் போட்டிகளில் 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கபடித் தொடரில் சம்மாந்துறை வலயத்தில் றாணைமடு இந்துக்கல்லூரி அணி மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று அகில இலங்கை ரீதியான போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப் போட்டியானது நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் 17.07.2024ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது முதல் போட்டியில் பழுகாமம் மகாவித்தியாலயத்தை 47:14 என்ற வித்தியாசத்தில் வெற்றி கொண்டு அடுத்த சுற்றில் கந்தளாய் மகாவித்தியாலயத்தை தொடர் 08ஆம் பக்கம்...

## நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டமானது 08ஆந் ஜுலை 2024 அன்று நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். எம். முஸாரப் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. த. கலையரசன் மற்றும் திரு. பைசல் காசிம் ஆகியோருடன் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் தொடர் 08ஆம் பக்கம்...

## அஸ்வெசும 2ஆம் கட்ட எண்ணீட்டாளர்களுக்கான பயிற்சி



நலன்புரி நன்மைகள் சபையின் "அஸ்வெசும" கொடுப்பனவு திட்டத்திற்கான 2ஆம் கட்ட தரவு உள்ளீடு எண்ணீட்டாளர்களுக்கான பயிற்சி செயலமர்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் தொடர் 08ஆம் பக்கம்...

## காட்டு யானைத்தாக்கங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு வழங்கல்

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் காட்டு யானை தாக்கங்களால் பாதிக்கப் பட்டு சொத்துக்களை இழந்தவர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் ஜுலை 16ஆந் திகதி 2024 அன்று நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் அம்பாறை மாவட்ட செயலாளர் திரு. சிந்தக்க அபேவிக்ரம அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டது.



மேலும் நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் திரு.க.றிஸ் வியாஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தொடர் 08ஆம் பக்கம்...

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர்-07 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற ஆனந்தம் அடைகின்றேன். பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர்-07 வெளிவருகின்றது. உண்மையில் "நாவெளி" மின்னிதழ் வாசகர்கள் மத்தியில் அதிக வரவேற்பையும், பாராட்டையும் பெற்று வருகின்றது. அத்தகைய மகிழ்வினைத் தந்து கொண்டிருக்கும் "நாவெளி" வாசகர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிக் கொண்டிருக்கும் நிருபர்கள், மற்றும் எழுத்தாளர்களுக்கும் உளம் கனிந்த நன்றிகளும், பாராட்டுகளும் உரித்தாகட்டும். அதேபோல் நாவிதன்வெளிப் பிரதேசத்தின் பரந்துபட்ட பார்வைப் பரப்புக்குள் இருந்து வெளிவருகின்ற "நாவெளி" மின்னிதழ் சஞ்சிகை உங்களை மேலும் மகிழ்விக்கும் என நம்புகின்றேன். அது மட்டுமால்லாது ,தற்போதைய கால கட்டங்களில் வாசிப்புப் பழக்கம் மருவிக் கொண்டு செல்வதைக் காணக்கூடிய தாக உள்ளது. எதற்கெடுத்தாலும் ஒவ்வொருவர் வாயிலிருந்தும் நேரமில்லை,நேரம் போதாது என்ற சொற்களே வருகின்றன.

பணிகள் நேரத்தைக் காட்டிலும் அதிகரித்துள்ளன என இதற்கு ஒரு வகையில் நியாயம் சொல்லப்பட்ட போதிலும், இந் நியாயம் எல்லோருக்கும் பொருந்துமா? எல்லா விடயங்களுக்கும் பொருந்துமா? என்ற கேள்விகளும் கூடவே எழுகின்றன. நேரத்தைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்து இயங்காததன் விளைவே இது என, மறுபுறத்தில் குரல் எழுப்பவும் ஆள் இருக்கிறது. நேரம் உண்மையில் பெறுமதி மிக்கது. விலைமதிக்க முடியாதது. இதையும் விடுத்து, உயிர் போன்றது என்றால், மாற்றுக் கருத்து இருக்குமா?

நேரத்தை சரிவர முகாமைத்துவம் செய்வது தனிமனிதப் பொறுப்பாகும். மனித ஆயுள் மிக மிக குறைவானது. இக் குறுகிய வாழ்நாளுக்குள் தான் இம்மைக்காகவும், மறுமைக்காகவும் சேமிக்க வேண்டும்.

ஒவ்வொரு தனி மனிதனின் வளர்ச்சியும், வெற்றியும் அவன் நேரத்தைக் கையாளும் விதத்தைப் பொறுத்து அமைந்து விடுகின்றது. இயற்கை எல்லோருக்கும் ஒரே நேர அளவைத்தான் அளிக்கின்றது. இதனைப் பொருத்தமான வகையில், பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர்களே சமுதாயத்தில் வெற்றியாளர்கள் எனக் கண்டறியப்படுகின்றார்கள்.

அதாவது, ஒருவர் தனது இலக்கின் பாதையில் ஒழுங்காகச் சென்று கொண்டிருக்கிறார் என்றால், அவர் நேரத்தை சரியாகத் திட்டமிட்டு முகாமைத்துவம் செய்கின்றார் என்று கணிப்பிட முடியும். நேரத்தின் முக்கியத்துவத்தை சரியாக உணர்ந்தவர்களாலேயே இவ்வாறு செல்ல முடியும்.

ஒரு நாளை ஒரு நாள் என்று ஒருமையில் பார்ப்பதற்கு மாறாக, 24 மணித்தியாலங்கள், 1,440 நிமிடங்கள், 86,400 வினாடிகள் என்கின்ற பன்மையில் பார்க்கும் போது ஒரு நாளின் செயற்திட்டங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்தி நிருவகிக்க வேண்டும் என்ற திடமான மனம் உருவாகும். நேரத்தைச் சிறப்பாகக் கடைப்பிடிப்பதால் வாழ்க்கையை சிறப்பாக வாழ முடியும் எனும் கருப்பொருள் ஆழ் மனதில் தெளிவாகும்.

" நேரம் என்பது நேர்கோட்டில் இயங்குகின்றது. அது ஒரு போதும் ஆரம்பப் புள்ளியை சந்திக்காது" என்பதைப் புரிந்து கொள்வோமேயானால், நாம் எல்லோரும் இச் சமுதாயத்தில் சிறந்த வெற்றியாளர்களே!

**என்றும் அன்புடன்...**
**-ஆசிரியர்**




*1. சிறந்தவனாக இரு, சிறந்ததை வைத்திரு, சிறந்ததை செய்.*

*2. ஓடாத நதியும், தேடாத மனமும் தெளிவு கொள்ளாது.*

*3. போகும்போதே என்னை ரசித்து கொண்டே போ, திரும்பி வரமாட்டேன் உனக்காக. இப்படிக்கு - வாழ்க்கை.*

*4. வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல, நீ மற்றவர்கள் மனதில் வாழும் வரை.*

*5. அனுபவத்தால் உணர வேண்டிய ஒன்றை ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் உணர வைக்க முடியாது.*

*6. உன் மனம் ஒன்றே உன்னை வீழ்த்தக்கூடிய ஒரே ஆயுதம். அது தெளிவாக இருக்கும் வரையில் நீ ஒருவராலும் வீழ்த்தப்படுவதில்லை.*

*7. உனக்கு நீ நல்லவனாய் இருந்தால் போதும், மற்றவருக்கு நீ கெட்டவனாய் தெரிந்தால் அது உன் குற்றம் இல்லை. கண்ணில் பிழை என்றால் பிம்பமும் பிழையே. அது பார்க்கப்படுபவன் பிழையல்ல, பார்ப்பவன் பிழை.*

*8. யாரை நீ வெறுத்தாலும் உன்னை மட்டுமாவது நேசிக்க கற்றுக்கொள். ஏனெனில் இந்த உலகிலேயே மிகச் சிறந்த காதல் உன்னை நீ நேசிப்பதுதான்.*

*9. இன்பத்திலும் துன்பத்திலும் மனம் விட்டுபேச துணை இல்லாதபோது தான் தெரியும் உண்மையான் அன்பின் பெருமை.*

*10. மௌனத்தில் வார்த்தைகளையும், கோபத்தில் அன்பையும் உணர்ந்து கொள்வது தான் உறவு புரிதல் இருந்தால் பிரிதல் இல்லை.*

# குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம்



நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவானது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இங்கு 300 பய னாளிகள் குடிநீர் இணைப்பு இன்றி மிகுந்த சிரமத்தில் வாழ்கின்றனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பா ளர் ஆகியோரின் முயற்சியின் கீழ் லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் அவர் களின் நிதிப் பங்களிப்புடன் (LYCA GNANAM FOUNDATION ) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக் கான குடிநீர் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கள ஆய்வு இடம் பெற்று கட்டங் கட்டமாக பயனாளி களுக்கு குடிநீர் வழங்கும் நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.

இதன் மூலம் 193 பயனாளிகள் தெரி வு செய்யப்பட்டு அனுமதி கிடைக் கப்பெற்றுள்ளது. அதில் 179 பயனா ளிகளுக்கு முதலாம் கட்டமாக ரூபா. 6,028,994.00 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு தற்போது குடிநீர் வசதி வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச மக்களின் 65% ஆன பய னாளிகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு அவர்களின் அடிப் படைத் தேவை பூர்த்தி செய்யப் பட்டுள்ளதுடன் இதற்கு நிதி உதவி வழங்கிய லைக்கா ஞானம் அறக் கட்டளை நிறுவன முகாமையாளர் கௌரவ. தவிசாளர் அல்லிராஜா சுபாஸ்கரன் அவர்களுக்கு எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்க ள் மற்றும் பயனாளிகள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள் கின்றோம். இந் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி யின் ஒரு மைல் கல்லாகும்.

# நன்னீர் மீன் வளர்ப்பும் நாவிதன்வெளி பிரதேசமும்



நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவ ர்களின் எண்ணத்தில் உதித்த நன்னீர் மீன்பிடித்துறையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பிரதித் திட்டமிடல் பணிப்பாளரின் வழிகாட் டுதலின் கீழ் கிழக்கு மாகாண நன்னீர் மீன்பிடி திணைக்களத்தின் அனுசரணையுடன் நாவிதன்வெளி பிரதேசத்திற்கு உட்பட்ட அன்ன மலை- 02 குளம், நாவிதன்வெளி பெரியகுளம் ஆகிய இரு குளங்களில் சுமார் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் 10,000 மீன் குஞ்சுகள் விடப்பட்டு தற்போது அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ் அறுவடை விழாவானது நாவிதன் வெளி பிரதேச செயலக பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2024.07.18 ஆந் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் விழாவில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தி.கிருபைராஜா மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், நன்னீர் மீன் பிடித் துறை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# நலன்புரி நன்மைகள் பற்றிய கண்ணோட்டம்

MI.Ishaq - Devolopment coordinating

සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD



நலன்புரி நன்மைகள் தொடர்பான செயற்பாடுகளானது, 2002 ஆம் ஆண்டின் 24 இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 1952/22 கீழ் நிறுவப்பட்டது. இது பெப்ரவரி 15ஆம் திகதி 2016 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது. நலன்புரி நன்மைகள் செயற்பாடுகளை முறையாக ஒழுங்கமைத்து நடைமுறைப் படுத்துவதற்கு என நலன்புரி நன்மைகள் சட்டத்தின் பிரிவு 03 கீழ் நலன்புரி நன்மைகள் சபையானது நிறுவப்பட்டது. பயனாளிகளை தேர்ந்தெடுப்பதற்கும் தெரிவுக்குழு மற்றும் மேல் முறையீட்டுக் குழுக்களை நியமித்து ஆட்சேபனை மற்றும் குறைகளை நிர்வகிப்பதன் மூலம் பொருத்தமான பயனாளிகளுக்கு இந்நன்மையை வழங்குவதனை இச்சபையானது உறுதி செய்கிறது. இந் நலன்புரி திட்டத்தின் பிரதான நோக்கம், அளவுகோல்களின் அடிப்படையில் ஒரு வெளிப்படையான தெரிவு செயல்முறை மூலம் தீவின் அனைத்து நலன்புரி நன்மை திட்டங்களின் கீழ் தகுதி பெறும் நபர்களை தொடர்ச்சியாக அடையாளம் காணல், நன்மைகளை வழங்கல் மற்றும் நன்மைகளை முடிவுறுத்தல் தொடர்பாக பங்குதாரர்களுக்கு அனுசரணையாக ஒருங்கிணைந்த நலன்புரி நன்மை தகவல் முறையினை நிறுவி பராமரித்து செல்வதாகும்.

எமது நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய உருவாக்கப் பட்ட இந்த அஸ்வெசும வேலைத் திட்டமானது 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டமானது முற்றுமுழுதாக ஒரு கொடுப்பனவு திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் வருமானம் குறைந்த, தேவையுடைய தொகுதியினர்கள் அடையாளம் காணப் பட்டு அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக இக்கொடுப்பனவு திட்டமானது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. சமூர்த்தி திட்டத்தினை இல்லாதொழித்து இத்திட்டம் உருவாக்கப்பட்டதாக பல்வேறு தப்பபிப்பிராயங்கள் நிலவிய போதிலும் சமுர்த்தி என்பது, மக்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற் திட்டங்களை கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்து கின்ற அதேவேளை அஸ்வெசும திட்டமானது, கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் அவர்களது பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதாக அமைகின்றது.



இந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலக எல்லைக்குள் கடந்த 2022 ஆம் ஆண்டு அஸ்வெசும பயனாளிகளை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் கோரப்பட்டு சுமார் 5,972 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இவ் விண்ணப்பங்களை நலன்புரி சபையின் IWMS தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு அவ் விண்ணப்பங்கள் தொடர்பான உண்மை தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு பிரதேச மட்டத்தில் தெரிவுக் குழு ஒன்றின் மூலமாக அவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு உரிய விதந்துரைப்புகளுடன் நலன்புரி நன்மை சபைக்கு முன்வைக்கப்பட்டது.




அதன் அடிப்படையில் நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவு பிரிவின் தீர்மானத்திற்கு அமைய நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் விண்ணப்பங்களில் இருந்து குறித்த முதலாம் கட்ட கொடுப்பனவுக்காக 3198 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். இருப்பினும் தேசிய அடையாள அட்டை இல்லாமை மற்றும் ஏனைய ஆவணங்கள் குறைபாடு காரணமாக குறித்த எண்ணிக்கையான பயனாளிகள் இதுவரை தமது கொடுப்பனவினை பெற முடியாமல் உள்ளனர்.

இதற்கு மேலதிகமாக நலன்புரி சபையானது, கொடுப்பனவுக்காக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் தொடர்பான தமது எதிர்ப்புக்களை (Objections) ஐ தெரிவிப்பதற்காகவும், கொடுப்பனவு கிடைக்கப்பெறாதவர்கள் தமது மேன்முறையீட்டினை தெரிவிப் பதற்காகவும் குறித்த காலம் வழங்கப்பட்டு அதனடிப்படையில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து சுமார் 2671 மேன்முறையீடுகளும், 103 எதிர்ப்பு முறையீடுகளும் கிடைக்கப் பெற்றன. தொடரும்...

# ட்ரம்ப் கொலை முயற்சி
## மௌனம் கலைத்த மெலானியா ட்ரம்ப்

P.RUPAN



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைக் கொலை செய்ய முயன்ற விடயம் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை உருவாகியுள்ள நிலையில், அந்த விடயம் தங்களுக்கு அச்சத்தை உருவாக்கியுள்ளதாக ட்ரம்பின் மனைவி மெலானியா தெரிவித்துள்ளார். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு வழக்குகளில் சிக்கி நீதிமன்றத்துக்கும் வீட்டுக்கும் அலைந்து கொண்டிருந்த நிலையில், வெகுநாட்களாக எந்தக்கருத்தும் தெரிவிக்காமல் அமைதி காத்து வந்தார் அவரது மனைவியான மெலானியா ட்ரம்ப். ஆனால் அவரது கணவரான ட்ரம்பைக் கொலை செய்ய முயற்சி நடந்ததால் மெலானியாவும், ட்ரம்ப்பின் பிள்ளைகளும் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

அது குறித்து மெலானியா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், என் கணவரை அந்த பயங்கர குண்டு தாக்கியதைக் கண்டபோது, என் மகன் வாழ்வும், என் வாழ்வும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு விடயத்தை எதிர்கொள்ள இருப்பதாக உணர்ந்தேன். என்று கூறியுள்ளார். அதாவது தங்கள் வாழ்வே மாறும் ஒரு நிலை காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் என் கணவரை பாதுகாப்பதற்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்து தைரியமாக செயற்பட்ட இரகசிய பாதுகாப்பு சேவை அதிகாரிகளுக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன் என்றும் மெலானியா ட்ரம்ப் கூறியுள்ளார்.

# பிரான்சில் தேர்தலில் வெற்றி பெற்ற கூட்டணிக் கட்சிகளுக்களுக்கிடையே மோதல்

பிரான்ஸ் தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே மோதல் உருவாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரான்(**Emmanuel Macron**) திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் அறிவித்தார். குறித்த தேர்தலில் முதல் சுற்றில் தீவிரக் கொள்கைகள் கொண்ட வலதுசாரிக் கட்சி முன்னிலை வகித்த நிலையில், உடனடியாக அக்கட்சியை ஆட்சிக்கு வரவிடாமல் மற்ற கட்சிகள் இணைந்து தீட்டிய திட்டத்தால், இரண்டாவது சுற்று தேர்தலில் வலதுசாரிக் கட்சி மூன்றாமிடத்துக்குத் தள்ளப்பட்டது. இதில் இடதுசாரிக் கட்சிகள் மற்ற கட்சிகளைவிட அதிக வாக்குகள் பெற்று முதலிடத்தைப் பெற்றாலும் எந்தகட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை.





இந்நிலையில் ஆட்சியமைப்பதற்காக இடதுசாரிகள் இணைந்து புதிதாக நேற **Popular Front (NFP)** என்னும் கூட்டணியை உருவாக்கினார்கள். ஆனால், எந்தக் கட்சியைச் சேர்ந்தவரை பிரதமராக தேர்ந்தெடுப்பது என்பது தொடர்பில் இதுவரை முடிவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக கூட்டணிக்கட்சிகளுக்குள் மோதல் உருவாகியுள்ளதோடு, கூட்டணியில் அதிக வாக்குகள் பெற்ற கட்சி, மற்ற கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளமையினால் பிரான்ஸ் அரசியலில் ஒரு குழப்பமான சூழல் உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

# சீனா மீது குற்றச்சாட்டு நேட்டோ கூட்டமைப்பு




நேட்டோ அமைப்பின் 75ஆவது ஆண்டு விழாவையொட்டி அமெரிக்காவில் நடைபெற்ற நேட்டோ உச்சி மாநாட்டின் நிறைவாக உறுப்பு நாடுகளின் தலைவர்கள் 32 பேரும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். இதன்போது அவர்கள் சீனா மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்து கடுமையாக விமர்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, சீன அரசின் விருப்பங்கள் மற்றும் கட்டாயக் கொள்கைகள் தொடர்ந்து நமது நலன்கள், பாதுகாப்பு மற்றும் மதிப்புகளுக்கு சவால் விடுவதாக உள்ளன.

ரஷ்யா போரில் ஈடுபடுவதற்கு தேவையான இராணுவ தளவாடங்களை சீனா வாரி வழங்கி வருகிறது. எனவே ரஷ்யாவின் போர் முயற்சிகளுக்கு உதவும் விதமாக அந்த நாட்டுக்கு வழங்கி வரும் அனைத்து பொருள் மற்றும் அரசியல் ஆதரவை உடனடியாக நிறுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனிடையே நேட்டோ அமைப்பின் இந்த குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஞானம் பிறந்தது

## சிறுகதை

வீரமுனை அருள் சுதன்



“மூக்குக்கண்ணாடியை பார்த்தாயா புள்ள? யாராச்சும் எடுத்தீங்களா, இங்கதானே வைத்தேன் எங்கு மாயமாகப் போனது......” என்று புலம்பியவாறே சண்முகம் தனது மூக்குக்கண்ணாடியை தேடினார்.

எழுபது வயதை தாண்டிய சண்முகம் மனைவியை இழந்து கடைசிக்காலத்தில் தனது மகனின் வீட்டில் அடைக்கலமாகியிருந்தான். மகனின் மனைவியோ இவரை ஒரு பாரமான பொருளாகவே பார்த்திருந்தாள். அவரை கண்டாலே பூனையைக் கண்ட எலிபோல் நடந்து கொள்வாள். தனது கடைசி வயிற்றுக் கஞ்சியை மகனின் வீட்டில் நிரப்ப எண்ணியிருந்த அவருக்கு தினம் விடிவதும் நாளைக் கடத்துவதும் தினமொரு போராட்டம். “ இங்கு இல்லை, எங்க போய்த்தான் அதைத் தொலைச்சதோ தெரியல்ல என் உசிரை வாங்குது இந்த கிழவன்...” என வாயில் முணுமுணுத்துக்கொண்டே தனது ஆறு வயது மகனுக்கு தாயாராகிய கமலா “இங்கு இல்லை மாமா” என தனக்குரிய சாதுரியத்துடன் கூற “தாத்தா இதோ இங்க வைத்திருக்கிறீங்க” என ஓடிச் சென்று அவரது அறையின் ஜன்னல் ஓரத்திலிருந்து எடுத்துக் கொடுத்தான்.

என் தங்கம் ஸ்கூலுக்குப் போகப் போறியா...” என அவனது கன்னத்தை கிள்ளியவாறே தனது சட்டைப் பையிலிருந்த இனிப்பு ரொபியை நீட்டியதும், “நன்றி தாத்தா” என அதனை வாங்கி துள்ளி ஓடியது அந்த பிஞ்சு நிலா. கண்விழித்து எழும்பி வந்த கணவன் சரவணனை பார்த்து “இதோ ரீ கொண்டுவாறேன் இருங்கோ” எனக் கூறிச்சென்ற கமலாவை பார்த்து “அப்பாவுக்கு ரீ கொடுத்தாயா...?” எனும் வினாவிற்கு அமைதியே விடையாக கிடைத்தது.

கையில் ரீயுடன் வரும்போது “இவருக்கு ஆக்கிக் கொட்டுறதும் பணிவிடை புரியிறதும்தானா என் வேலை... எப்பதான் இவரை முதியோர் இல்லத்துக்கு கொண்டு போய் சேர்ப்பீங்க எனக்கு இப்ப ஒரு முடிவு தெரியணும்” என்று கத்தினாள். “பொறு..பொறு... உன்ர தொல்லை ஒரு பக்கம் அவர்ர தொல்லை ஒரு பக்கம் நான் இரண்டு பக்கம் அடிபடும் மத்தளம் போல படுறபாடு எனக்குத்தான் தெரியும்.” எனக் கூறி, இரண்டில் ஒன்று பார்ப்பதென விரைந்து தன் தகப்பன் பட்ட பாடெல்லாம் மறந்த மகன் அவருக்கான இல்ல அனுமதியை பெறச் சென்றான்.

“ அப்பா... உங்களுக்கு ஒரு முதியோர் இல்லம் பார்த்திருக்கு வாங்கள் போவம்” என்று அழைத்ததும் கண்களில் இனம் புரியாத கண்ணீர் மருமகளுக்குத் தான் நான் வயதான காலத்தில் பாரமாக இருக்கிறேன் என்று பார்த்தால் மகனுக்கும் பாரமாகிவிட்டேனே என்ற ஏக்கம் கவலை சூழ கண்களில் கண்ணீருடன் அவரின் முதியோர் இல்லப் பயணம் தொடர்ந்தது.


பாடசாலை விட்டு வந்த மகன், “அப்பா, அம்மா எங்கே நமது தாத்தா? எனக் கேட்க இருவரும் விழித்துக்கொண்டு தடுமாறினர். பின்பு தந்தை மகனை அழைத்து “வா மகன் தாத்தா, நீ ஸ்கூல் போன தபோல வளர்ந்ததும் அவரை முதியோர் இல்லம் என்ற பாடசாலைக்கு அனுப்பிவிட்டோம். அவர் இனி வர மாட்டார் இங்கே தங்கிடுவார். புது நண்பர்களெல்லாம் இவருக்கு கிடைப்பாங்க” என்று கூறி ஆறுதல் படுத்தினார்.

மறுநாள் காலை மகன் எழுந்து “அப்பா, அப்பா ரீச்சர் செய்து வரச் சொன்ன வீட்டு வேலை பாடமான சித்திரப் பாடத்துக்கான எனது வரைதலைப் பாருங்கப்பா நல்லா இருக்கா?...” என ஆர்வத்தோடு விரித்து காட்டினான் அந்த பிஞ்சு உள்ளம். “நான் கட்ட விரும்பும் வீடு” எனும் தலைப்பில் வரைந்த அந்த வீட்டை பார்த்து தந்தை மகிழ்ந்து “ நன்றாக இருக்கிறது மகன், இந்த வீட்டில் ஏன் இரண்டு அறைகள் மட்டும் வைத்திருக்கின்றாய்?” என வினவ, அதற்கு மகனோ “ நான் பெருத்ததும் உங்களத் தான் முதியோர் இல்லத்தில் கொண்டு விட்டு விடுவேனே. அதன் பிறகு நானும் அம்மாவும் இதில் இருப்போம்” என்ற மகனின் வார்தைகள் அவர் மனதில் தீயாய் பாய்ந்தது. தந்தைக்கு ஞானம் பிறந்தது. அந்த பிஞ்சு உள்ளத்தின் உணர்வுகூட எனக்கு இல்லை என தனக்குள் தன்னை கேட்டுக்கொண்டே, தனது தந்தையிடம் மன்னிப்புக் கோர முதியோர் இல்லத்திற்கு ஓடினார் சரவணன். அவரது வருகை பார்க்க சண்முகம் அங்கு இல்லை. அவர் உடலை விட்டு ஆன்மா பிரிந்த விடயம் அங்கு வந்தபோதுதான் சரவணனுக்கு தெரிந்தது. கண்ணீர் மல்கினான். இருந்தும் என்ன பயன் தந்தை அவனை இதுவரை அழ வைத்ததில்லையே.. ஆனாலும் அவனுக்கு அழுகை வந்தது. அதைப் பார்க்க தந்தை இல்லையே... **முற்றும் ....!**

# கணினி உலகை புரட்டி போட களமிறங்கி இருக்கும் *CHAT GPT*

ICT UNIT - DIVISIONAL SECRETARIAT, NAVITHANVELI






Chat GPT ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ஸ் தொழில் நுட்பத்தினால் வடிவமைக்கப்பட்டு இயக்கப்படும் WhatsApp போன்ற ஒரு chat செயலி ஆகும். மனிதர்கள் கேட்கும் கேள்விகள் மற்றும் அவர்கள் ஏற்கனவே கேட்ட கேள்விகள் ஆகியவற்றை நினைவிலே வைத்துக் கொண்டு அதன் அடிப்படையில் மனிதர்களுடன் உரையாடல்களை நிகழ்த்தும் விதத்தில் Artificial Intelligence தொழில் நுட்பத்தினை கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு Chat செயலிதான் இந்த Chat GPT.

உதாரணத்திற்கு, ஒரு ஆராய்ச்சி மாணவர் ஏதேனும் ஒரு தலைப்பில் ஒரு கட்டுரை எழுத சொன்னால் Chat GPT எழுதித்தரும். வீட்டில் இருக்கும் பெண் மணிகள் அவர்களின் வீட்டு குளிர்சாதனப்பெட்டியில் மிச்சம் மீதி இருக்கும் காய்கறிகளை பற்றி சொன்னால், அதன் அடிப்படையில் அவர்களின் விருப்பத்திற்கேற்ற சமையல் குறிப்புகளை அவர்களுக்கு உடனடியாக அனுப்பித் தரும் இந்த Chat GPT செயலி. நம்முடைய நீண்ட தூர பயண விவரங்களை பற்றி சொன்னால், முழு பயண திட்டத்தையும் தானாகவே உருவாக்கி தரும் இந்த Chat GPT செயலி இதுபோன்ற ஏராளமான உதவிகளை Chat GPT செயலி மூலம் பெறலாம்.

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு உரையை மொழி பெயர்க்க GPTஐப் பயன்படுத்தலாம். மிக நீண்ட உரையை சுருக்கமாக்கவும் இந்த செயலியை பயன்படுத்தலாம், இதனால் பயனர்கள் செய்தியின் முக்கியப் புள்ளிகளை விரைவாகப் புரிந்துகொள்ள முடியும். கட்டுரைகள் ,கதைகள் என பலவற்றை உருவாக்க இந்த செயலி மிகவும் பயனுள்ள வகையில் உதவுகிறது. கட்டுரைகள் உருவாக்குபவர்களுக்கு நிறைய நேரத்தையும் முயற்சியையும் மிச்சப்படுத்துகிறது. இது போன்ற ஏராளமான உதவிகளை சாதாரண மனிதர்கள் Chat GPT செயலியிடம் பெறலாம்.

Open AI என்கிற நிறுவனத்தால் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், உருவாக்கப்பட்டது தான் இந்த செயலி. பலதரப்பட்ட தலைப்புகளில் தரவுகள் (Data) உள்ளீடாக கொடுக்கப்பட்டு Machine Learning தொழில்நுட்பம் உதவியுடன் நாம் கேட்கும் கேள்விகளுக்கு ஏற்ற மாதிரியான பதிலை தரும் விதத்தில் இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது .சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், கேள்விகள் என்ன விதத்தில் கேட்கப்படுகிறது என்பதை புரிந்து கொண்டு அதற்கேற்ப பொருத்தமான அர்த்தமுள்ள பதில்களை மட்டுமே சொல்லும் விதத்தில் உருவாக்கப் பட்டு இருப்பது தான் இந்த Chat GPT செயலி.

2015 ஆம் ஆண்டு வாக்கில் உலக பெரும் பணக்காரரான SpaceX மற்றும் TESLA நிறுவனங்களின் அதிபரான எலன்மஸ்க் மற்றும் சிலரால் உருவாக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தின் நிர்வாகப்பொறுப்பில் இருந்து எலன் மஸ்க் வெளியேறினார். ஆனால் இந்த நிறுவனத்துக்கான நிதி உதவியை அவர் தொடர்ந்து செய்து வந்தார். வருங்கால வேலைகள் அனைத்துமே இனி முழுக்க முழுக்க Automationக்கு மாறும், இனி எல்லா வேலைகளையும் எந்திரங்கள் மட்டுமே செய்யும். மனிதர்கள் அனைவரும் விரைவில் வேலையை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களை பற்றி பலர் தற்போது அச்சப்படுவதை நாம் காணுகிறோம்.

ஆனால் அதே புதிய தொழில்நுட்பம் தான் இன்று மனிதர்களின் அறிவையும், கற்றல் திறனையும் அடுத்த தளத்துக்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கிறது என்பதையும் நாம் அறியவேண்டியது அவசியம். அப்படிப்பட்ட மனிதர்களுக்கு நிறைய வகையில் உதவ வந்து இருக்கும் ஒரு வியக்கத்தக்க தொழில்நுட்பம் தான் இந்த Chat GPT செயலி. நாம் கொடுக்கும் தரவுகளை புரிந்து கொண்டு, நாம் பேசும் அதே இயற்கையான மொழியில் விடைகளை கொடுக்கும் ஒரு தோழனாக, வழிகாட்டியாக, அறிவாசானாக களமிறங்கி இருப்பதுதான் இந்த Chat GPT செயலி.

இந்த Chat GPT செயலி Transformer என்கிற அல்காரிதத்தைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இது மனித மூளை வேலை செய்யும் NeuralNetwork என்ற அடிப்படையை ஒட்டி வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த Algorithm ஆல் அதற்கு கொடுக்கப்படும் தரவுகளை பகுத்தாய்ந்து புரிந்து கொள்ள முடியும். அதைப் பயன்படுத்தி மனிதர்கள் பேசுவதைப் போன்ற உரையாடல்களை இந்த Chat GPT செயலி உருவாக்கும். மனிதர்கள் பேசும் மொழியைப் புரிந்து கொண்டு ,அதே சொற்களைப் பயன்படுத்தி இந்த Chat GPT செயலியால் பதிலளிக்க முடியும்.

Google நிறுவனத்திற்கு மிக பெரும் சவாலாக களமிறங்கியுள்ள நிறுவனம் தான் Chat GPT. எத்தனையோ சவால்களை வெற்றிகரமாக சந்தித்து சாதித்துள்ள Google, Chat GPTயின் சவாலையும் சந்திக்குமா இல்லை இருந்த இடம் தெரியாமல் போய்விடுமா என்பதே இன்று தொழில்நுட்ப உலகில் அனைவரும் விவாதிக்கும் விஷயமாகும். வருங்காலம் இன்னும் என்ன ஆச்சரியங்களை வைத்துக் கொண்டு காத்திருக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**அகில இலங்கை மட்டத்திற்கு தெரிவான...**

38:34 என்ற வித்தியாசத்தில் வெற்றி கொண்டு அரைஇறுதிப் போட்டியில் அமிர்தகலி ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தினை 47:34 என்ற வித்தியாசத்தில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் கோரக்கல்மடு மகாவித்தியாலயத்துடன் மிக விறு விறுப்பாக நடைபெற்ற போட்டியில் 38:26 என்ற வித்தியாசத்தில் தோல்வியுற்று இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் தேசியபோட்டிக்கு றாணைமடு இந்துக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**காட்டு யானைத்தாக்கங்களால் பாதிக்கப்பட்டவர்...**

திருமதி. தி. கிருபைராஜா,நிருவாக உத்தியோகத்தர் திரு. ஒ. கெ. கீர்த்தி குசுமிந்த ஆகிய பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கி வைத்தனர்.

**அஸ்வெசும 2ஆம் கட்ட எண்ணீட்டாளர்களுக்கான**

அவர்களின் தலைமையில் 23 ஜூலை 2024 ஆந் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் "அஸ்வெசும" 2ஆம் கட்ட தரவு சேகரிப்பில் ஈடுபடும் கிராம அலுவலர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல் தொடர்பான தெளிவூட்டல்களை நாவிதன்வெளி பிரதேச செயலக நலன்புரி நன்மைகள் பிரிவின் சிரேஷ்ட நலன்புரி தகவல் உத்தியோகத்தர் வழங்கினார். மேலும் இவ் எண்ணீட்டு நடவடிக்கைகளுக்கான மென்பொருள் பாவனை தொடர்பான வழிகாட்டல்கள் பிரதேச செயலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கான நிதி அனுசரனையை நலன்புரி நன்மைகள் சபை வழங்கியிருந்தது.

**பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்...**

திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன், உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், கணக்காளர் திரு. க. றிஸ்வி யாஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தி.கிருபைராஜா போன்ற பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். மேலும், நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட துறை சார் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

## சமுர்த்தி ரன்விமன விஷேச வீடமைப்பு வேலைத்திட்டம்



சமுர்த்தி ரன்விமன விஷேச வீடமைப்பு வேலைத்திட்டத்தின் ரூபா. 750,000 பெறுமதியான வீட்டின் 1ஆம் கட்ட காசோலை ரூபா. 250,000 நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நாவிதன்வெளி சமுர்த்தி வலயத்தின் சொறிக்கல்முனை-01 கிராம அலுவலர் பிரிவினை சேர்ந்த பயனாளியான கி. கிருபைராஜினி அவர்களுக்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களினால் 2024 ஜூலை 02 ஆந் திகதியன்று வழங்கி வைக்கப்பட்டது.

## விஷேட தேவையுடைய மாணவர்களை ஒன்றிணைக்கும் கலாசார நிகழ்வு



நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான கலாசார நிகழ்வானது 2024.06.25 ஆந் திகதியன்று கமு/சது/றாணமடு இந்துக் கல்லூரியில் கல்லூரி அதிபர் திரு. கே. கதிரைநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர்திரு.எஸ். மகேந்திரகுமார் அவர்களும் விஷேட அதிதியாக Deaflink நிறுவனத்தின் இணைப்பாளர் திரு. ரீ. இளையராஜா அவர்களும் கௌரவ அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன் அவர்களும் கலந்து கொண்டனர்.

விஷேடகல்விப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், அனைத்து மதங்களை பிரதிபலிக்கும் வகையிலான நிகழ்வுகள் மற்றும் அவர்களின் உணவு முறைகள் தொடர்பான தகவல்களும் காட்சிப்படுத்தப்பட்டன.மேலும்இந்நிகழ்வில் கமு/சது/றாணமடு இந்துக்கல்லூரி மற்றும் வீரத்திடல் அல்-கிதாயா மகா வித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுக்கான நிதி அனுசரணையை Deaflink நிறுவனம் வழங்கியிருந்தது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.06 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 துா | ம | 2 கே | 3 து | ■ | 4 து | ம் | 5 பி |
| து | ■ | 6 து | ரு | உ | ■ | ■ | ண |
| 7 வ | 8 ரி | ■ | த் | ■ | 9 பா | கு | க் |
| 10 ளை | ப | ■ | தி | ■ | சா | ■ | கு |
| ■ | ■ | 11 னா | ■ | 12 பா | ங் | 13 கி | ■ |
| 14 அ | க் | க | 15 றை | ■ | 16 கு | ல் | ர |
| மு | ■ | ■ | 17 பா | 18 தை | ■ | லா | ■ |
| 19 து | ணை | வி | ■ | 20 க | ட் | டி | ல் |

## வெற்றியீட்டியவர்கள்

**1ஆம் இடம்**

A.சுதர்சன்
வீரமுனை

**2ஆம் இடம்**

ஜெ.ஜெசீலா பர்வீன்
நட்பிட்டிமுனை

**3ஆம் இடம்**

இ.ரூபிகா
மண்டூர்

## பாராட்டு பெறுவோர்

A.ரம்மியா
வீரமுனை.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.07

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | | | ■ | | ■ | |
| 10 | | ■ | ■ | 11 | | 12 | |
| ■ | 13 | 14 | 15 | ■ | ■ | 16 | |
| 17 | ■ | 18 | | | 19 | | ■ |
| 20 | 21 | | | ■ | 22 | | 23 |
| 24 | | | | ■ | | ■ | |

## இடமிருந்து வலம்.

01. அறிவைத்தருவது.
05. இதற்கு ஈர்ப்புசக்தி உண்டாம்.
07. இந்து சமயத்தில் இந்த வழிபாடு உண்டு. (குழம்பி)
08. இது விலகாதா என எதிர்பார்ப்பவர்கள் அதிகம். (குழம்பி)
09. முகத்திற்கு இன்னுமொரு பெயர். (குழம்பி)
10. மதுவுக்கு இன்னுமொரு பெயர். (திரும்பி)
11. சைகை என்றும் சொல்லலாம். (குழம்பி)
13. இது மெய்பட வேண்டும் என்பர். (திரும்பி)
16. ஏற்றுக் கொள்வது.
18. எதிர்ப்பு என்றும் சொல்லலாம். (குழம்பி)
20. செயல்.
22. நட்சத்திரங்களில் ஒன்று. (குழம்பி)
24. இதன் பெயரில் போட்டிகளும் நடைபெறும். (குழம்பி)

## மேலிருந்து கீழ்.

01. இதனை வில்லுக்கு உவமிப்பர்.
02. கட்டளை என்றும் சொல்லலாம். (குழம்பி)
03. ஆழ்ந்த தியானத்தை குறிக்கும்.
04. பெரியோரை இது செய்ய வேண்டும் என்பர். (குழம்பி)
05. பறவை.
06. ஆலயம் ஒன்றுக்கு மூர்த்தி,தலம்,தீர்த்தம் போல் இதுவும் தேவை.
08. இதுவும் ஓர் அளவுதான்.
12. செல்வம் என்றும் சொல்லலாம். (குழம்பி)
14. படிக்கும் போது சிலர் செய்வது. (குழம்பி)
15. மருத்துவ சாத்திரம் என்றும் சொல்லலாம். (குழம்பி)
17. இது சிலையில் எழுத்தாம். (குழம்பி)
19. இதுதான் எம்மவரின் உயிர்நாடி.
21. மரம். (தலைகீழ்)
23. மந்திரம் ஒன்று. (தலைகீழ்)

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.08.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.

RELOAD
முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு : 100/=

# செயற்கைக்கோள்

NASA

D.YASUKI (CRPO) - DEVELPOMENT OFFICER



பூமி சுழலும் வேகத்தில் அதனுடன் ஒன்றிணைந்து சுற்றும் செயற்கைக் கோள்தான் தகவல் செயற்கைக் கோள். பூமியும் அதுவும் ஒரே வேகத் தில் சுற்றி வருவதால் அது வானில் ஒரே இடத்தில் நிலைத்திருப்பது போல் தோன்றுகிறது. இது நிலநடு வரைக்கு மேல் 35,900 கி.மீ உயரத்தி ல் சுற்றி வருகிறது. ஒலி, ஒளிபரப்புக ள், டெலிபோன் உரையாடல்கள் முதலியவற்றை உயர் அலை அடுக் க சைகைகளாக மாற்றி அனுப்பும் போது, இச்செயற்கைக் கோளிலுள்ள ஏற்பிகள் அவைகளை ஏற்று பூமிக்கு .திருப்பி அனுப்புகின்றன.



பூமியிலுள்ள அந்தந்த நிலையங்கள் அவைகளை அந்தந்தப் பகுதிகளில் பரப்புகின்றன. இதனால் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு சில நொடிகளிலே செய்திகளை அனுப்ப முடிகிறது



# உலகம் போற்றும் கொடி

உலகில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு கொடி உண்டு. அது அந்த நாட்டின் தேசியக் கொடி எனப்படும். இங்கேயிருக்கும் கொடி யானது எந்த நாட்டுக்குரிய கொடி? இது ஒரு நாட்டுக்கு மாத்திரம் உரிய கொடியல்ல. உலகம் முழுவதற்கும் பொதுவான கொடி ஐக்கிய நாடுகள் கொடி. ஐக்கிய நாடுகள் என்பது உலக நாடுகளுக்கு பொதுவான, உலக நாடுகளின் அமைப்பாகும். இந்த அமைப்பிலே அநேகமான உலக நாடுகள் சேர்ந்திருக்கின்றன. உலகம் முழுவதும் போர் ஒழிந்து அமைதி ஏற்பட வேண்டும், நாடுகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது.



இரண்டாவது உலகப்போர் முடிவுக் கு வந்ததும் 1945 இல் இத்தாபனம் உருவாக்கப்பட்டது. இதன் கொடி இளநீல நிறமுடையது. அதிலே உலக நாடுகளின் படம் பொறிக்கப் பட்டிருக்கிறது. இது சாதாரணமாக நாங்கள் பார்க்கும் தேசப்படமல்ல. வடதுருவத்தை மையமாகக் கொண் டு வரையப்பட்ட தேசப்படம். இந்த இளநீலப்பட்டுக் கொடி உலகம் முழுதும் பட்டொளி வீசிப் பறக்கிறது

# மாணவர் ஆக்கம்

M.G.F.SHAHIKKA - SORIKALMUNAI -01



# 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வித்திட்டம்

M.F.M.FAZIL - DEVELOPMENT OFFICER



க.பொ.த. (சா/ த) சித்தியடைந்த, சித்தியடைய தவறிய மாணவர்களுக்காக கல்வி அமைச்சினால் 2017ம் ஆண்டு பரிசோதனை செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு 2019ம் ஆண்டு உத்தியோகபூர்வ கல்விச் செயற்திட்டமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. தரம் 1-13 வரை மாணவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் பாடசாலையை விட்டு இடைவிலகல் கூடாது என்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்திட்டமே இதுவாகும். மாணவர்கள் இடைவிலகினால் சமூகத்திலே பல்வேறுபட்ட குற்றச் செயல்கள் அதிகரிக்கும் இதனைத் தடுப்பதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும். இந்தக் கற்கை நெறியானது 26 பாடங்களில் காணப்படும் பிரதான பாடங்களுடன் தொழில் நுட்பபாடமும் சேர்ந்ததாகும்.



E-TECH, B-TECH ஆகிய துறையில் இணைந்து புதிய பாடத்துறையினை Vocational Stream அறிமுகம் படுத்தப்பட்டுள்ளது. இது உ/ த பாடத்துறையைப் போன்று 2வருட காலத்தைக் கொண்டதாகும். குறித்த துறையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு NVQ Level 4 சான்றிதழ் வழங்கப்படும் (UNIVOTEC) மூலமாக



மேலும் இதில் 2 வருடம் நிறைவு செய்த மாணவர்களுக்கு NAITA ஊடாக On the job Training (OJT) மேற்பார்வை செய்து சான்றிதழும் வழங்கப்படும். இதில் NVQ4 சித்தியடைந்த மாணவன் க.பொ.த. (சா/த) சித்தியடைந்ததற்கு சமனானவாக கருதப்படுவார்கள். அதேபோல் NVQ5- Diploma, NVQ6 - High Diploma NVQ7 Degree சமனான சான்றிதழ் வழங்கப்படும். 13ம் வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வித்திட்டத்தில் பாடத்திட்டத்தில் பரிட்சைக்கு புள்ளித்திட்டம் 3 பகுதிகளாக வழங்கப்படும். 60/50 புள்ளிகள் செயன்முறை பரிட்சைக்கு (60/50 என்பது தெரிவு செய்யும் பாடத்தின் அடிப்படையில் மாறுபடலாம் இதில் சித்தியடைபவர்களுக்கு தொழில் உலகிலேயே வேகமாக தொழில் வாய்ப்பும் கிடைக்கும். இது 3ம் நிலை கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். இங்கு பாடமானது இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. பொதுப்பாடம், பிரயோகப்பாடம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. 1ம் தவணைக்குரிய பாடம் கட்டாயபாடமாகும். மொத்தமாக 63 பாடங்கள் காணப்படுகின்றன. இதில் கல்விகற்கின்ற மாணவர்களுக்கு கல்வியமைச்சினால் பல்வேறு சலுகைகள் காணப்படுகின்றன. குறித்த பாடங்களை



கற்பிப்பதற்கு தெரிவு செய்த பாடசாலைகளில் Smart Class Room வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலைகளில் Computer Laboratory Subject Related Equipment 1 VR Kits போன்ற வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 3ம் நிலை கல்வி நிறுவனங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள காலத்துக்கு நாளொன்றுக்கு 500 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது.



அத்துடன NVQ Level பெறும் மாணவர்களுக்கு வெளிநாடு செல்ல முன்னுரிமையும் வழங்கப்படும். இப்பாடங்களுக்கான அலகுகள் யாவும் 1ம் தொகுதி, 2ம் தொகுதி என பிரித்து 1ம் தொகுதி இரண்டாம் தவணையிலும் 2 ம் தொகுதி மூன்றாம் தவணையிலும் கற்பிக்கப்படும்.பாடசாலையில் சேர்ந்த அன்று முதல் SURAKSHA காப்புறுதிக்கு உறித்துடையவராக கருதப்படுவர். வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தி வெற்றி பெறுவோம்.

# காணிக்கச்சேரி நிகழ்ச்சியின் மூலம் உங்களுக்கு கிடைக்கும் பலன்கள்

NMM A. Sujan - Colonization Officer

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



1. நீங்கள் அனுபவிக்கும் இடத்தின் அளவிடல் நடவடிக்கையை முன்னெடுத்து, வரைபடம் தயாரித்தல்.

2 . காணிக்கு உறுதிப் பத்திரம் வழங்கல்.

3. நீங்கள் விவசாயியாயின் விரைவில் உங்களுக்கு உறுதிப்பத்திரம் வழங்கல்.

4 . உங்களிடம் உள்ள நிலத்திற்கு பிரச்சினை இருப்பின் அதற்கு தீர்வு காணல்.

5. உங்களுக்கு உரிமைச் சான்றிதழ் கிடைத்தல்.

## உரிமைச் சான்றிதழ் மூலம் கிடைக்கும் பயன்கள்:

1. பிரச்சினைகள் அற்ற காணியாக மாறல்.

2. மற்றொரு நபருக்கு மாற்றுதலை, இலகுவாக செய்யக் கூடியதாக் இருத்தல்.

3. வங்கியினால்,இலகுவாக கடன் பெற்றுக் கொள்ளக் கூடியமை இருத்தல்.

4. இலங்கையின் எந்தவொரு காணி பதிவாளர் அலுவலகத்திலும், உங்களுடைய காணி தொடர்பில் தகவல் பெற்றுக் கொள்ளும் வகையிலான சந்தர்ப்பம் கிடைக்கின்றமை

5.முறைகேடான வகையில் உங்களுடைய காணிக்கு போலிபத்திரம்; தயாரிக்க இயலாமை.

## 3.2. அனுமதிப்பத்திர உரிமையாளர் கொடுப்பனவு பத்திரம் ( காணி உறுதியை ) பெற்றுக் கொள்வது எவ்வாறு?

அனுமதிப் பத்திரத்தில் இருக்கக் கூடிய நிபந்தனைகளை உங்களால் நிறைவேற்ற முடியுமாயின், கொடுப்பனவு பத்திரம்/ காணி உறுதியை பெற்றுக் கொள்வதற்கு. பிரதேச செயலாளரிடம் விண்ணப்பிக்க முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரதேச செயலாளர், மாவட்ட நில அளவை அத்தியட்சகருக்கு, அதற்கான உத்தரவை பணித்து, காணியை அளவிட்டு எல்லைக்கல் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரதேச செயலாளருக்கு நில அளவையாளர் அத்தியட்சகரின் நில அளவை வரைபடம் கிடைத்த தன் பின்னர், கொடுப்பனவு பத்திரத்தை தயாரிக்க முடியும்.

## 3.3. காணி உறுதிப்பத்திரம்

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அரசாங்கத்தின் காணிகட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது காணி பிரதான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ், அது வழங்கப்படும். காணி உறுதிப் பத்திரம் என்பது ஜனாதிபதியினால் பிரஜை ஒருவருக்கு வழங்கப்படும் உறுதிப் பத்திரமாகும். ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு மாத்திரமே காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் உறுதிப்பத்திரம் வழங்கப்படும்.

இந்த உறுதிப் பத்திரத்தினை வழங்குவதற்கு முதலில் அளவையியலாளரின் வரைபடத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். குறித்த இடத்தினை அள அது காணி வரைபடத்துடன் இணைக்கப்படல் வேண்டும். வரைபடத்தின் பிரகாரம் காணியின் எல்லை மற்றும் அளவு என்பன துணை ஆதாரங்களாக விளக்கப்பட்டிருக்கும். (சில காலத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட பல ஜயபூமி கொடுப்பனவு பத்திரங்களுக்கு, அன்று காணப்பட்ட சட்டத்திற்கு அமைய வரைபடம் இணைக்கப்பட்டிருக்கும்).

கொடுப்பனவு பத்திரத்தில் சில நிபந்தனைகளும், இரண்டு காப்புறுதி ஏற்பாடுகளும் உள்ளடங்கியிருக்கும். இந்த நிபந்தனைகளுக்கு ஏற்ப காணியை மிகவும் சிறிய அளவில் பங்கிடக்கூடிய அளவும் குறிப்படப்பட்டிருக்கும். இந்த கொடுப்பனவு பத்திரத்தில் ஜனாதிபதியின் கையொப்பத்தின் நகல், இடப்பட்டு சிவப்பு நிறத்தில் முத்திரை பதிக்கப்பட்டிருக்கும். இந்த கொடுப்பனவு பத்திரத்தினை பெறும் நபருக்குப் பின்னர், அவரது வாழ்க்கை துணைக்கு (மனைவி / கணவன்) காணியின் உரிமை கிடைக்கும். அது வாழ்க்கை உரிமை என குறிக்கப்படும்.

கொடுப்பனவு பத்திர உரிமையாளருக்கு இந்த காணிக்கான அடுத்த உரிமையாளர் யார் என்பதனை பெயரிடவும் முடியும். இவ்வாறு அடுத்த உரிமையாளரை பெயரிடாத சந்தர்ப்பத்தில் வாழ்க்கை துணைக்கு (கணவன் அல்லது மனைவி) வாழ்க்கை உரிமையின் பின்னர், மூத்த ஆண்பிள்ளைக்கு காணி உரிமை உரித்தாகும். பிரதேச செயலாளரிடம் பெற்ற அனுமதியின் பின்னர் இந்த காணி உரிமை மாற்றல் அல்லது விற்பனை முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் உரிமை மாற்றல் காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். முதற்பிரதி தவற விடப்படும் பட்சத்தில் அல்லது அழிவுறும் பட்சத்தில் அந்த அலுவலகத்தில் உறுதி செய்யப்பட்ட பிரதியை பெற்றுக் கொள்ள முடியும். ஊரிமையில் மாற்றம் செய்யப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அதனை

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

செல்வசிகாமணி (ஓய்வுநிலை அதிபர்)- சென்றல்கேம்ப்



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



அதனை நிறைவேற்ற அந்தப் பதிவிரதை பம்பரம் போல் சுழன்று கொண்டிருப்பாள். காலை உணவை தயாரித்து பிள்ளைகளை பள்ளிக்கனுப்பி விட்டு பின் பதி அவனுக்கு உணவெடுத்துக் கொண்டு புறப்படுவாள் வயலுக்கு. காலையில் குடித்த தேனீரோடு வயலுக்கு சென்ற கணவன் பாவம் என்ற உணர்வில் நேரம் செல்வதற்கு முன் அவனுக்கு உணவை கொண்டு கொடுத்துவிட வேண்டும் எனும் ஏக்கத்தோடு விரைந்து சென்று வேலை செய்யும் கணவனுக்கு உணவைக் கொடுத்தது அவளுக்கு பெரிய ஆறுதல். அப்பாடா காலை உணவை சமைத்து கணவனுக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலைக்கும் கொடுத்தனுப்பியாயிற்று நான் செய்ய வேண்டிய கடமையை செய்தாயிற்று என்ற நிம்மதி பெருமூச்சு அவளுக்கு. ஆனால் தனக்கென்று ஒரு வயிறு இருக்கின்றதே நான் உண்ண வேண்டுமே என்ற எண்ணமே அந்த தேவதைக்கு வருவதில்லை அவ்வாறு வந்தாலும் எனக்காகவும் என் பிள்ளைகள் வாழ்வுக்காகவும் ஓடாய் உழைக்கின்றாரே அந்த மனுசன் அவரும் எனது பிள்ளைகளும் பசியாறினால் எனது வயிறு நிறைந்து விடும் எனக்கு பசியே வருவதில்லை என்று எங்கள் தாய்க்குலங்கள் கூறுவதை காதில் கேட்டிருக்கிறேன்.

இங்குதான் எமது கிராமமக்களின் விருந்தோம்பல் தொடர்பான தகவல்களையே அன்பர்களோடு பகிரலாம் என எண்ணுகின்றேன். முதலில் இம்மக்களின் பின்னணிகளைப் பார்க்கலாம். நாவிதன்வெளி பிரதேச குடியேற்றக் கிராமங்களில் வாழும் மக்களில் துறைநீலாவணை, பெரிய நீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை போன்ற ஊர்களைத் தாயகமாகக் கொண்டவர்கள். இவர்கள் அனைவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் ஒரே குலத்தவர்கள் என்பதாலும் ஒருவருக்கு ஒருவர் ஏதோ ஒருவகையில் உறவினர். அதனால் இம்மக்களிடையே ஒற்றுமையும் கூட்டுறவும் மேலோங்கிக் காணப்படுகிறது. அதே போன்று ஏனைய சமூகத்தவர்களுடனும் மிக நட்பாக இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சரி இனி எமது மக்களின் விருந்தோம்பலை நோக்குவோம். இது நெல் விளையும் பூமியல்லவா? அவ்வாறெனின் விருந்துக்கேது தட்டுப்பாடு. இங்குள்ள வீடுகளில் நிறைய நெல் இருக்கும் அதனால் தேவையான அளவு அரிசியும் இருக்கும். எமது குடும்பப் பெண்களும் எந்தவேளையிலும் உணவு சமைப்பதிலும் கொடுப்பதிலும் சலிக்காதவர்கள். சாதாரணமாக அவர்கள் உணவு சமைக்கும் போது சற்று அதிகமாகவே சமைப்பது வழக்கம். ஏனெனில், எந்தவேளையிலும் எவரும் வீட்டுக்கு வரலாம் அப்படி வந்தால் அவர்களுக்கு கட்டாயம் உணவு கொடுக்க வேண்டும் என்பது அவர்களின் கொள்கையாகும். இங்கு போனால் பசியாறலாம் என்று எண்ணி விருந்தினர்கள் மட்டுமல்ல ஏழைகள், யாசகர்கள் கூட வருவார்கள். இவற்றையெல்லாம் எண்ணியே எமது மக்கள் மேலதிகமாக சமைப்பதுண்டு.

அதுபோல் எங்கள் கிராமங்களில் எந்த வயதினருக்கும் தேவையான பொழுது போக்கு வசதிகள் உள்ளன. இடவசதிகள் நிறையவே காணப்படுகின்றன. சிறுவர்களை எடுத்துக் கொண்டால் வளவுகளில் பழமரங்கள் நிறையவே உள்ளன. கொய்யா, மா, தோடை, பலா போன்றவை அவற்றில் ஏறியும் பழம்பறித்தும் உண்ணுவர் விளையாடுவர் களைப்பு ஏற்பட்டால் வாய்க்காலில் குளித்து விளையாடுவர். அப்படி விளையாடி விட்டு அவர்கள் எல்லோரும் ஏதாவது ஒரு வீட்டுக்கு போவார்கள் உணவு உண்பதற்காக.அவர்கள் அனைவருக்கும் அந்த வீட்டுக்கார அம்மாவே உணவு வழங்குவார். அவருக்கு தன்பிள்ளை எது பிறபிள்ளை எது என்று வேறுபாடே தோன்றாது. தொடரும்...



# காசினிக்கீரை



கானாங்கோழி கீரை என்பதுதான் மருவி காசினி கீரையாகிவிட்டது. வைட்டமின் A,B,C, மற்றும் தாது உப்புகள், கால்சியம், பாஸ்பரஸ் இரும்புச்சத்து என சகல சத்துக்களையும் வைத்திருப்பது காசினி கீரையாகும். காசினி கீரை விந்தணு உற்பத்தியை ஊக்குவிக்கும். இந்த காசினி கீரையை உணவில் சேர்த்து கொள்வதால் ஜீரண கோளாறு, பித்தப் பை, ரத்தகை நீங்குகிறது. உள்ளுறுப்புக ளான கல்லீரல், சிறுநீரகம், இருதயம் சம்பந்தமான பிரச்சினைகளையும் குணப்படுத்தும் வீரியம் இந்த காசினிக்கு உண்டு. சிறுநீரகக் கற்கள் கரையும். காசினி கீரையுடன் சீரகம், மஞ்சள் சேர்த்து கஷாயம் போல காய்ச்சி குடித்தால் கல்லீரல் வீக்கம் குறையும். இன்சுலின் சுரப்பை இந்த கீரை சுரக்க செய்வதால் சர்க்கரை நோயாளிகளுக்கு மிகச்சிறந்த உணவாக இது திகழ்கிறது. காசினிக்கீரையை சுத்தம் செய்து நன்றாக கழுவி நிழலில் உலர்த்தி காயவைக்க வேண்டும். சருகு போல காய்ந்ததும், அதை மிக்ஸியில் பொடி செய்து வைத்து கொண்டால் பல வகைகளில் பயன்படுத்தலாம். காசினி கீரை பொடி நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும். சர்க்கரை நோயாளிகள் சர்க்கரை நோயாளிகள் காசினி கீரை பொடியை காலை நேரத்தில் குடித்து வந்தால் நீரிழிவு கட்டுப்படும். அல்லது இந்த பொடியுடன் நெய் அல்லது நல்லெண்ணெய் விட்டு பிசைந்து சாப்பிட்டால் நீரிழிவை கட்டுப்படுத்தலாம். காயங்களை ஆற்றக் கூடிய சக்தி இந்த காசினிக்கு உண்டு. குறிப்பாக சர்க்கரை நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு புண்கள் வந்தால் இந்த கீரையை அரைத்து புண்களின் மீது பற்று போட்டு கட்டினால் சீக்கிரமாகவே குணமாகிவிடும். உடலில் எந்த இடத்தில் வீக்கம் எற்பட்டிருந்தாலும் அவ் வீக்கத் தை குணப்படுத்தும் குணம் கொண்டது காசினி கீரை. எவ்வளவு மோசமான புண்கள் இருந்தாலும் அதை காசினி குணப்படுத்திவிடும். அல்லது இந்த கீரையின் சாறினை புண்களின் மீது தடவினாலும் புண்கள் விரைவில் ஆறி விடும். காசினி வேர்கள் வெள்ளைப்பபடு தல் அதிக உதிரப்போக்கு போன்ற பிரச்சனைகளில் அவதிப்படும் பெண்கள் காசினிக் கீரையை உணவில் அதிகம் சேர்த்து கொள்ளலாம். அல்லது காசினி கீரையை உலர்த்தி பொடி செய்து அதனு டன் தேன் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் தீர்வு கிடைக்கும். அல்லது இந்த பொடியை காலையில் அரை ஸ்பூன் தேனில் குழைத்து 21 நாட்கள் வெள்ளைப்படுதல் குணமாகும். காசினி கீரையின் வேர்கூட மருந்தாகும். இந்த வேர் காய்ச்சலை குணமாக்குவதுடன் எப்படி பயன்படுத்துவது மற்றகீரைகளை போலவே காசினிக்கீரையை பருப்புடன் சேர்த்து சமைக்கலாம்.. இதனால் ரத்தம் சுத்தி அடையும்.உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கூடும். பற்களில் உள்ள பிரச்சனை யை சரி செய்யக்கூடியது காசினி கீரை.



உடல் எடை குறைய வேண்டும் என்று நினைப்பவர்கள் இந்த கீரையை பயன் படுத்தலாம். காரணம் உடலிலுள்ள தே வையற்ற நீரை வெளியேற்றி ஆரோக்கி யத்தை பாதுகாக்கிறது. அதுமட்டுமல்ல இந்த கீரையில் சூப் செய்து குடித்தாலும் எடை குறையும். அல்லது காசினி கீரை யை உலர்த்தி பொடி செய்து தினமும் இரவு நேரத்தில் வெந்நீரில் கலந்து சாப்பிட்டாலும் உடல் பருமன் குறையும்.



காசினி கீரையில் சட்னி செய்வார்கள் காசினி கீரையை நன்றாக அலசி அதை விழுதுபோல் அரைத்து எடுத்து கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் சேர்த்து அதில் இந்த விழுதை கொட்டி கொதிக்க விட வேண்டும். காசினி சட்னி: நன்றாக விழுது கொதித்ததும் காய்ந்த மிளகாய், சின்ன வெங்காயத்தை நறுக்கி அதில் போட வேண்டும். சிறிது பூண்டையும் தட்டி அதில் போட வேண்டும். இவைகள் அனைத்துமே நன்றாக கொதித்து வந்ததும் சிறிது தேங்காயை அரைத்து கீரையில் கொட்டி இறக்கிவிட வேண்டும். மற்றொரு வாணலியில், எண்ணெய் கடுகு கறிவேப்பிலை தாளித்து கீரையில் கொட்டினால் காசினி கீரை சட்னி ரெடி. இதை இட்லி, தோசைக்கு தொட்டு சாப்பிடலாம்.



# மீ கோரெங்

## 2 நபர்களுக்குப் பரிமாறக்கூடிய அளவு

**தயாரிக்கும் நேரம்:** 25 நிமிடங்கள்
**சமைக்கும் நேரம்:** 20 நிமிடங்கள்

இ.றூபிகா - அபிவிருத்தி உத்தியோகத்தர்

*. 1/2 மேசைக்கரண்டி எண்ணெய்.
*. 01 மேசைக்கரண்டி மிளகாய் பேஸ்ட்.
*. 01 சிறிதாக நறுக்கப்பட்ட வெள்ளைப்பூண்டு.
*. 02 நறுக்கிய சிறு வெங்காயங்கள்.
*. 02 தேக்கரண்டி வடிக்கட்டப்பட்ட உலரவைக்கப்பட்ட இறால்.
*. 100 கிராம் இறைச்சி.
*. 200 கிராம் ஓடுகள் நீக்கப்பட்ட இறால்.
*. 120 கிராம் சைசிம் இலையிலிருந்து காம்பு பிரிக்கப்பட்ட, 03 சென்டிமீட்டர் நீளத்திற்கு வெட்டப்பட வேண்டும்.
*. 300 கிராம் முழுத்தானிய மஞ்சள் நூடல்ஸ்.
*. 1/2 நறுக்கிய முட்டைகோஸ்.
*. 80 கிராம் தவ்கே.
*. 02 மேசைக்கரண்டி சோடியம் குறை வான தக்காளி சாஸ்.
*. 02 சுருள் வெங்காயத்தண்டுகள்.
*. 02 சென்டிமீட்டர் நீளத்திற் வெட்டப்பட்டது.

**செய்யும் முறை :**

1. நான்-ஸ்டிக் பேனில் (non-stick pan) எண்ணெயை சூடாக்கவும். வெங்காயம், பூண்டு மற்றும் மிளகாய் பேஸ்டை 1 நிமிடத்திற்கு அல்லது வாசனை வரும்வரை வறுக்கவும். உலரவைக்கப்பட்ட இறாலை சேர்த்து,வாசனை வரும்வரை மேலும் 1 நிமிடத்திற்கு வறுக்கவும்.

2.துண்டு கொத்திறைச்சியைத் தொடர்ந்து இறால்களைச் சேர்த்து 3-5 நிமிடங்களுக்கு வறுக்கவும். இந்தக்கலவை மிகவும் உலர்ந்து இருந்தால் ¼ கோப்பை தண்ணீரைச் சேர்க்கவும்.

3. அடுத்து சசிம் தண்டுகளைச் சேர்க்கவும். 1-2 நிமிடங்களுக்குப்பின், சைசிம் இலைகள், நூடில்ஸ் மற்றும் முட்டை கோஸை சேர்க்கவும். காய்கறிகள் மென்மையாக ஆகும் வரைச் சமைக்கவும்.

4. தவ்கே சுருள் வெங்காயத்தண்டுகள் மற்றும் தக்காளி சாஸை சேர்த்து, நன்றாக கலக்கவும்.

5. சூடாகப் பரிமாறவும்.

புரதம்
கால்சியம்

# தகாப்புணர்ச்சி

திருமதி. டி. ஜாசுகி




சமூகத்தில் பல்வேறு வன்முறைகள் பெண்களுக்கு எதிராக இடம்பெற்று வருகின்றதன. ஆனாலும் மிகவும் மனவேனையாக விடயங்கள் பல இடம்பெறுகின்றன. அதிலும் தந்தை தான் பெற்ற பிள்ளையுடன் பாலியல் உறவில் ஈடுபடுவதும், அவர்களுக்கு பிறக்கும் குழந்தையை கொலை செயவதும் போன்ற சட்ட விரோத செயல்கள் இடம்பெறுவதை ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

கணவன், மனைவிக்கிடையிலான குடும்ப வன்முறைகளால் கணவன், மனைவி பிரிந்து வாழ்கின்றனர். இதனால் பிள்ளைகளுக்கு சரியான பாதுகாப்பு வழங்கப்படாமல் இருக்கின்றன. இதனால் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். தன்னுடைய தந்தைக்கு தானே பிள்ளை பெற்றுக்கொள்வது ஜீரணிக்க முடியாத ஒரு விடயமாகும்.

இப்படியான சமூக சீரழிவுகளிலிருந்து பிள்ளைகளை பாதுகாப்பதற்கு ஏற்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வந்தாலும் ஆங்காங்கே தகாப்புணர்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இதனால் கண்ணியமான தந்தைகளின் மனங்களும் மன உளைச்சலுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர். தந்தை - மகள் உறவு புனிதமானது கன்னியப்படுத்த முடியாவிட்டாலும் கலங்கப்படுத்த வேண்டாம் என்று தெரிவிக்கின்றனர். இவர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக இப்படியான சம்பங்கள் இடம்பெறாமல் குறைக்க முடியும் என்கின்றனர். ஓரிடத்தில் 19 வயதுடைய தன் பிள்ளையுடன் பாலியல் உறவில் ஈடுபட்டு பிறந்த சிசுவை கொலை செய்து வயல்வெளியில் போட்ட சம்பவம் தந்தையே தன் பிள்ளையை சிறுவர் துஷ்பிரயோகம் செய்த சம்பவங்கள் தன்னுடைய இரண்டாவது மனைவியினுடைய பெண் பிள்ளையை பாலியல் வல்லுறவு செய்த சம்பவங்கள் பலவற்றை அறிந்துள்ளோம். இவர்களுக்கான தண்டனைகள் பல வருடங்கள் செல்லாத வகையில் விரைவாக வழங்கப்பட வேண்டும் என்பது மக்களின் கருத்தாக உள்ளது.





மேலும் சமூக விழுமியங்கள், நெறிமுறைகள, மரபுகள், வழமைகள், முறைமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். மத நிறுவனங்கள் சமூக சீரழிவுகளை குறைக்கும் விதத்தில் இறையச்சம் தொடர்பான விழிப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டும்.



தண்டனைகளும் இறுக்கமான தாக்கப்பட வேண்டும். போதைப்பொருட்களின் பாவனைகள் அதிகரித்து வருவதும் ஒரு காரணமாக கூறப்படுகின்றது. எனவே போதை ஒழிப்பு தொடர்பான வேலைத்திட்டத்தையும் அதிகரிக்க வேண்டும்.



சமூக நலன் சார்ந்து அக்கறையுடன் அனைவரும் செயற்பட வேண்டும். சமூகத்தில் கிராம மட்டத்தில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் பிரச்சினையான குடும்பங்களை அடையாளம் கண்டு வலுவூட்டல் வேண்டும்.



# உடல் நலமும் சிறப்பான வாழ்க்கை முறையும்

கி.யோகலிங்கம் - பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்




“காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா” என்று அன்றைக்கு சித்தர்கள் கூறினார்கள். பின்னால் வந்த கவிஞர் பட்டுக்கோட்டையாரோ “காயமே இது மெய்யடா இதில் கண்ணும் கருத்தும் வையடா நோயில்லாமல் காத்து நூறாண்டுகள் உய்யடா” என உடம்பின் மேன்மையை விளக்கினார். திருமூலரும் திருமந்திரத்திலே “உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன் உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன் உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே” என உடம்பின் மகத்துவத்தை பாடல் மூலம் விளக்குகின்றார்.

இன்றைய வாழ்வியலில் எல்லாப் பொருளும் வீடு தேடி வரவைத்து ஒன்லைனில் பணத்தைக் கொடுத்து வாங்கலாம் ஆனால் வாங்க முடியாத பொருள் உண்டென்றால் அது ஆரோக்கியம் மட்டும்தான். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் முன்பு இருவர் சந்தித்துக் கொண்டால் குடும்ப விபரம், விவசாயம் இயற்கை இவைகளைத்தான் பேசினார்கள் ஆனால் இன்று சுகர், பிரஸர், கொலஸ்ரோல் என்றுதான பேசுகிறார்கள். மொத்தத்தில் நிறைய மனிதர்கள் நடமாடும் வியாதி கூடங்களாகி விட்டார்கள். நெஞ்சம் நிறைய பயம், பாக்கெட் நிறைய மாத்திரைகள், உடல் உறுப்பு குறைபாடு, பலவீனம் போன்ற பல நோய்களில் இருந்து நம்மை பாதுகாப்பது சவாலாக உள்ளது. முன்னைய காலத்தில் ஒவ்வொரு உணவையும் சாப்பிடும் போது அதன் சுவையறிந்து சாப்பிட்டோம். ஆனால் இன்று சுகர் அறிந்து சாப்பிடும் காலமாக மாறிவிட்டது. இதனால் உணவே மருந்து என்பது மாறி மருந்தே உணவாகிவிடுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வேடிக்கையாக ஒருவர் சொன்னார் என் மனைவியும் சுகரும் ஒன்றுதான் என்று இன்னொருவர் கேட்டார் எப்படி என்று இரண்டையும் என்னால் கண்ரோல் பண்ண முடியவில்லை என்றார். அந்தளவு உணவில் கட்டுப்பாடு தேவை அன்றைக்கெல்லாம் உணவு உண்பவர்களை பிரித்து சொல்லும்போது ஒருவேளை உண்பவன் யோகி, இரு வேளை உண்பவன் யோகி, மூன்று வேளை உண்பவன் ரோகி, நான்கு வேளை உண்பவன் துரோகி என பிரித்தார்கள். உணவில் கவனம் அக்கறை அன்று இருந்தது. எப்போது வயிற்றை அரைவயிறு உணவாலும் கால்வயிறு தண்ணீராலும் கால் வயிற்றை காலியாகவும் வைத்திருக்க வேண்டும் என்பார்கள். இந்தியாவின் தலை சிறந்த பொறியியல் மேதை விஸ்வேஸ்வரய்யா 103 ஆண்டுகள் வாழ்ந்தவர். அவர் கூறும் யோசனைகள் அளவோடு சாப்பிடு, எப்போதும் மகிழ்ச்சியாயிரு மனசாட்சிக்கு விரோதமான செயல்களைச் செய்யாதே, நாள்தோறும் குறித்த நேரத்தில் தூங்கச்செல், சம்பாதிக்கும் போதே சேமி, எப்பதும் சுறு சுறுப்பாய் இரு, களைப்பு ஏற்படும்வரை வேலை செய் இந்த ஏழு குறிக்கோள்களை நோக்கி வாழ்க்கை நடாத்து என்றார்.

பாரதியாரும் விசையுறு பந்தினைப் போல் உள்ளம் மேவியபடி செல்லும் உடல் கேட்டேன் என்றார் உடல் வலுவடைய உடற்பயிற்சியி இருந்தாலும் எல்லோரும் எளிதாக பின்பற்றக் கூடிய எளிதான பயிற்சி நடைபயிற்சி ஆகும். இது பயிற்சிகளின் அரசன் என்கிறார்கள். உச்சி முதல் உள்ளங் கால்வரை உள்ள அனைத்து உறுப்புக்களும் செயற்படும் ஒரே பயிற்சி நடைப்பயிற்சி எந்தவித கருவிகளும் பணச்செலவுகளும் இல்லாத ஒரு பயிற்சி. தினமும் நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு “ என்டார்மின்” எனும் ஹார்மோன் சுரக்கிறது. இதனால் மன அழுத்தம் குறைகிறது மன அமைதி கிடைக்கின்றது. முழங்கால் வலி தடுக்கப்படுகிறது. எலும்புகளைச் சுற்றியுள்ள தசைகள் வலுவடைகின்றன. கால் தசைகள் மனித உடலினுள் இரண்டாவது இதயம்போல் செயல்படுகின்றது என்கின்றனர் மருத்துவர்கள். உடல் நலம் காப்பதில் இதுபோன்ற எளிய பயிற்சிகளை இனியாவது தொடர்வோம்.

இறைவன் கொடுத்த இந்த உடல் அமைப்பை ஒரு அமைச்சரவைக்கு ஒப்பாக சொல்வார்கள். மூளை-முதலமைச்சர், தலை-கல்வி, கண்-சட்டம், காது-தகவல் தொழில்நுட்பம், மூக்கு-சுகாதாரம், பல்-மனித வள மேம்பாடு, கைகள்-தொழில்துறை, இதயம்-நிதி, வயிறு-உணவுத்துறை, தோல்-பாதுகாப்பு, கால்-போக்குவரத்து, நுரையீரல்-சுற்றுச்சூழல். இவ்வளவு சிறப்பாக உன்னதமாக உடம்பை நாம் போற்றி பாதுகாக்க வேண்டுமல்லவா. எனவே உடல் நலத்தை பேணிக்காப்போம் ஆரோக்கிய வாழ்க்கை வாழ்ந்து காட்டுவோம்.







வயிற்றுப் பசி போக்க
காலத்தை கடத்திக் கொள்ள
செய்வதறியாது தடுமாறும் ஏழைக்கு
கை கொடுக்கும் தொழிலே
விவசாயி எனும் பதவி

பாதித் தூக்கத்தை விட்டு
பதறியடித்துக் கொண்டு
உண்டதும் உண்ணாததுமாய்
பாதி வயிற்றுடனும்
பச்சைப் போத்தல் நிறைய தண்ணீரும்.

ஆதவனின் எறிப்புத் தணிக்க
பண்தொப்பி தலையிலிட்டு
வரம்பு வரம்பாக கால் தடம் பதித்து
விதையிட்ட வயல் வெளியில்
பயிர் வரும் வரை அவனுக்கு
கையிலில்லை உயிர்

உரமிட்டு நீர் பாய்ச்சி
உதிரம் கொடுத்து உயிர்காப்பது போல்
தினமும் வியர்வை சிந்தி
களை பிடுங்கி காவற்காத்து வாரி பெற
கனவிலே மிதக்கும் ஜீவன் அவன்
விவசாயி...

A.R.JANOOFA

அமைதியின் நிழலில்
அணையாத தூக்கம்
கருணையே பார்
எங்கும் கவி மனதாகி
புகைப்படங்களே
மிஞ்சும்
சருகுகள் சரிந்ததில்
சுவடுகள் படிந்து
ஒரு முறையேனும்
பயணித்திருப்பின்
அகழ்வுகளினால்
அடவிகள்
எழுத்தாயின..

கானகத்தின் அலாதி
எனக்கும்
கவிதைகளுக்குப்
பஞ்சமில்லை
அலறிடும் உயிர்களோடு
மூங்கில் வனத்தில்
பட்டாம் பூச்சிகள்
மெதுவாய் நகரும்
காற்றின் ஊடே
உழல்ந்திடும் வண்டுகளின்
ரீங்காரம்
இசை பாடும் குயிலின்
ராகம்
மனம் வருடிப் போகும்
அமைதீயின் நிழலில்....

யோகராசா கவிதா
அன்னமலை

# வரலாற்று சிறப்புமிக்க சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலம்

ஏ.எல்.எம்.ஷினாஸ்,கே.நீலேந்திரன்



அம்பாறை மாவட்டத்தின் நாவிதன் வெளி பிரதேச செயலகத்தின் கீழ் அமைந்திருக்கின்ற ஒரு சிறிய கிராமமாக சொறிக்கல்முனை கிராமம் திகழ்கின்றது. இக் கிராமம் மிகவும் பாரம்பரிய வரலாற்றுப் பின்னணியை கொண்டுள்ளது. இக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் அனைவரும் கத்தோலிக்க சமயத்தை தழுவியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இக்கிராமத்திற்கு சுமார் 360 ஆண்டுகளுக்கு முன் கத்தோலிக்க மதம் ஆரம்பிக்கப்பட்டதாக சரித்திர சான்றுகள் கூறுகின்றன.

சாந்தாகுருஸ் ( Holy Cross ) என்று அழைக்கப்படும் இத்தேவாலயமே இலங்கையின் முதலாவது சாந்தா குருஸ் (Holy Cross) தேவாலயம் என்ற பெருமையை அடைகிறது. இயேசுநாதர் மரித்த சிலுவை மரத்தின் ஒரு சிறு துண்டு ரோமாபுரியில் இருந்து கோவைக்கு கொண்டு வரப்பட்டு, பேரருட் பெருந்தகை வெற்றிக்கனி ஆயர் அவர்களால் கோவையிலிருந்து பெறப்பட்டு இவ் ஆலயத்தில் வைக்கப்பட்டு பக்தர்களால் வணங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் புரட்டாசி 14ஆம் திகதி இவ் ஆலய திருவிழாவின் போது ஆலயத்திற்கு வெளியே எடுக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பக்தர்களுக்கு வழிபட சந்தர்ப்பம் கொடுக்கப் படுகிறது.

இத் திருவிழாவிற்கு இலங்கை நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது. முத்திப்பேறு பெற்ற வண. யோசப்வாஸ் 1710இல் வருகை தந்து தமது திருப்பாதத்தை பதித்து திருப்பலி ஒப்புக் கொடுத்து இம் மண்ணிற்கு கிடைத்த மாபெரும் பாக்கியம் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

கொன்சால்வேஸ் சுவாமிகள் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு குடிசை வடிவில் ஆரம்பத்தில் ஆலயத்தை அமைத்தார் என்று வரலாறு கூறுகிறது. மட்டு நகரில் பணியாற்றிய கோவையை சேர்ந்த குருக்களான அருப். திரு. அன்ரோனியோ, அருப். திரு. றப்பாயேல், அரு. திரு. யோக்கியம் அடிகளார் ஆகியோரின் அனுசரனையுடன் "பாஸ்கல்" முதலியார் அவர்களால் 1896இல் நிரந்தர ஆலயம் அமைக்கப் பட்டது. 1896ஆல் ஆயர் பேரருட் திரு. கஸ்ரன் றொபிஷே (யே.ச) அவர்களால் இவ்வாலயம் தகிப்பங்காப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இப்பங்கின் முற்பங்குக் குருவாக அருப்பணி யோசப்மேரி (யே.ச) அடிகளார் நியமனம் பெற்றார். இவ்வாலயத்தின் விசேட அம்சமானது இவ்வாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிலுவையில் மரித்த இயேசு நாதரின் திரு உடல் கல்லறை ஆண்டவர் என்று பக்தர்களால் அழைக்கப் படுகின்றது. இச் சொரூபம் இந்தியாவில் அமைந்துள்ள தூத்துக்குடி எனும் இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகவும். புதுமைகள் பல செய்யும் இச் சொரூபத்தில் தொடர்ந்து வணக்கம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வருடமும் பெரிய வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் 'பாஸ்கா' நிகழ்வில் இச் சொரூபம் எடுக்கப்பட்டு சிலுவையில் அறைந்து இறக்கம் செய்யப்பட்டு பின்பு கீழே இறக்கப்பட்டு பக்தர்களின் வழிபாட்டிற்கு வைக்கப்படுகின்றது. இப் புனிதமான நிகழ்வில் நாட்டின் பல இடங்களில் இருந்து பக்தர்கள் திரள்வது குறிப்பிடத்தக்கது. பக்தர்களின் வேண்டுதல்கள் யாவும் கேட்கப்படுவதால் தொடர்ந்து புதுமைகள் புரியும் இக் கல்லறை ஆண்டவரின் அருளை பெறுவதற்கு இக்காலத்திற்கு மக்கள் திருவிழாக் காலங்களில் மாத்திரமல்ல எல்லா நாட்களிலும் வருகை தந்து இக் கல்லறை ஆண்டவரை வழிபடுவது குறிப்பிடத்தக்கது.



